கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

மானியக் கோரிக்கை எண். 7

அறிவிப்புகள்
2023-2024

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 33 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**

## 1. மீன்பிடி கலன்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி உரிமத்தினை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்படும்.

தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குமுறைப்படுத்தும் விதிகள், 2020–ன் கீழ் மீன்பிடி கலன்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி உரிமத்தினை புதுப்பித்திடும் நடைமுறையினால் மீனவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை களைந்திடும் விதமாக, தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மீன்பிடி உரிமத்தினை புதுப்பித்திட வழிவகை செய்யப்படும்.

**2. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்திட தமிழ்நாடு அரசால் 2007-ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நலவாரியம் நிறுவப்பட்டது. இந்நலவாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றுள், உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடையும் நிகழ்வில், அவர்களின் குடும்பத்திற்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் 15,000 ரூபாய் உதவித்தொகை 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 3. கடலில் மீன்பிடிக்கும் பொழுது காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உதவித்தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

கடலில் மீன்பிடிக்கும் பொழுது காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு, தற்போது நாளொன்றுக்கு உதவித்தொகையாக 250 ரூபாய் வீதம் மாதத்திற்கு 7,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. காணாமல் போகும் மீனவரின் குடும்பம், தங்களது வாழ்க்கையினை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு, அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் நாளொன்றுக்கான உதவித்தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தப்பட்டு, மாதம் ஒன்றிற்கு 10,500 ரூபாயாக வழங்கப்படும்.

**4. தமிழ்நாட்டில் உள்ள 10,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு, 75 விழுக்காடு மானியத்தில், 40,000 'உயிர்காப்பு சட்டைகள்' (Life Jacket), மொத்தம் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டின் கடற்பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், மீன்பிடித்தலின் போது ஏற்படும் விபத்து மற்றும் எதிர்பாராத அசாதாரண சூழ்நிலைகளில், கடலில் மூழ்குவதை தவிர்த்திடும் பொருட்டு, மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் விதமாக, நடப்பாண்டில், 10,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு, படகு ஒன்றிற்கு நான்கு வீதம், மொத்தம் 40,000 உயிர் காப்பு சட்டைகள் (Life Jacket) 75 விழுக்காடு மானியத்தில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 5. நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டையில் 40 கோடி ரூபாய் செலவில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை பகுதி மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுவதற்கும், தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையை பெற்றிடவும், படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், இப்பகுதியில் உள்ள மணல்திட்டுக்களை தூர்வாரி அகற்றி, வடக்கு மற்றும் தெற்கு அலைதடுப்பு சுவர், படகு அணையும் தளம், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், உட்புற சாலை, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், கழிப்பிடம், உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய சிறிய மீன்பிடி துறைமுகம் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**6. கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை மீன் இறங்கு தளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தும் பணிகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் கடற்கரையோரத்தில் பாதுகாப்பு தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் மொத்தம் 49 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை கிராமத்தினை கடலரிப்பிலிருந்து பாதுகாத்திடவும், மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், தூண்டில் வளைவுகளுடன் கூடிய அலை தடுப்பு சுவர், மீன் ஏலக்கூடம் உள்ளிட்ட வசதிகள் மொத்தம் 35 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மற்றும் கீச்சான்குப்பம் கிராம பகுதிகளில், பாதுகாப்பு தடுப்புச்சுவர்கள் மொத்தம் 14 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**7. செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலிகுப்பத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சின்னாங்குடி மீன் இறங்குதளம் மேம்பாட்டு பணிகள் மொத்தம் 49 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலிகுப்பத்தில் தூண்டில் வளைவு, வலை பின்னும் கூடம் போன்ற வசதிகளுடன், மீன் இறங்கு தளம் 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், மயிலாடுதுறை மாவட்டம், சின்னாங்குடி மீனவ கிராம மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி வலைகளை சரிசெய்வதற்கும், முகத்துவாரத்தில் மணல் திட்டுக்கள் அகற்றப்பட்டு, நிலைப்படுத்தும் சுவர், வலைபின்னும் கூட வசதிகளுடன், மீன் இறங்குதளம் 24 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**8. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மேற்குவாடி மற்றும் ரோச்மாநகர் ஆகிய மீன் இறங்குதளங்கள் 45 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மேற்குவாடியில் மீனவர்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திட ஏதுவாக, 25 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும் மற்றும் ரோச்மாநகர் மீன் இறங்குதளத்தில், தூண்டில் வளைவுகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் 20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**9. திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மேலகடியப்பட்டணம் மீன் இறங்குதளம் தூண்டில் வளைவுகளுடன் கூடிய மேம்பாட்டு பணிகள் 45 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

திருநெல்வேலி மாவட்டம், பெருமணல் மீனவ கிராம மீனவர்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திட வழிவகை செய்யும் வகையில், தூண்டில் வளைவுடன் கூடிய உட்கட்டமைப்பு பணிகள் 20 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், மேலகடியப்பட்டணம் மீனவ கிராம படகுகளை பாதுகாத்திட, தூண்டில் வளைவுடன் கூடிய அலை தடுப்பு சுவர் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மீன் இறங்கு தளம் 25 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## 10. தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீன் இறங்குதளம் தூண்டில் வளைவுகளுடன் 41 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு மீன் இறங்குதளத்தின் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில், தூண்டில் வளைவுகள் நீட்டிக்கப்படுவதுடன், ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இத்திட்டம் 41 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், இக்கிராமத்திலுள்ள 250 க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் பயன் பெறும்.

**11. திருநெல்வேலி மாவட்டம், கூத்தன்குழி மற்றும் இடிந்தகரை, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி மற்றும் நம்புதாளை, கடலூர் மாவட்டம் தேவனாம்பட்டினம் வடக்கு, தெற்கு மற்றும் சூர்யா நகர், விழுப்புரம் மாவட்டம் முட்டுக்காடு அழகன்குப்பம், வசவன்குப்பம் மற்றும் கைப்பாணிகுப்பம் ஆகிய 9 மீனவ கிராமங்களில் 40 கோடி ரூபாய் செலவில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

திருநெல்வேலி மாவட்டம் கூத்தன்குழி மற்றும் இடிந்தகரை மீனவ கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடி மற்றும் நம்புதாளையில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினம் வடக்கு, தெற்கு மற்றும் சூர்யா நகர் ஆகிய மீனவ கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம் முட்டுக்காடு அழகன்குப்பம், வசவன்குப்பம் மற்றும் கைப்பானிகுப்பம் ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் செலவிலும் அமைக்கப்படும்.

**12. திருவள்ளூர் மாவட்டம் நொச்சிக்குப்பம், திருவாரூர் மாவட்டம் முனங்காடு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி ஆகிய 3 மீனவ கிராமங்களில் 23 கோடி ரூபாய் செலவில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

திருவள்ளூர் மாவட்டம் நொச்சிக்குப்பம் மீனவ கிராமத்தில் படகு அணையும் தளம், வலைபின்னும் கூடம், மீன் உலர்த்தும் தளம் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளம் 10 கோடி ரூபாய் செலவிலும், திருவாரூர் மாவட்டம் முனங்காட்டில் படகு அணையும் தளம், மீன் ஏலக்கூடம், அணுகு சாலை வசதிகள் மற்றும் தூர்வாருதல் ஆகிய பணிகளுடன் மீன் இறங்குதளம் மொத்தம் 10 கோடி ரூபாய் செலவிலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி மீனவ கிராமத்தில், மீன் ஏலக்கூடம் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மீன் இறங்குதளம் மொத்தம் 3 கோடி ரூபாய் செலவிலும் அமைக்கப்படும்.

**13. கன்னியாகுமரி மாவட்டம், அன்னை நகர் மீன் இறங்கு தளத்தினை தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்துதல் மற்றும் தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகம் தூர்வாருதல் ஆகிய பணிகள் மொத்தம் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டம், அன்னை நகர் மீனவக் கிராம படகுகளை கடல் சீற்றத்திலிருந்து பாதுகாத்திட, அன்னை நகர் மீன் இறங்குதளம் 20 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுகளுடன் மேம்படுத்தப்படும். மேலும், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகப்பகுதியில் படகு போக்குவரத்திற்கு இடையூறாக படிந்துள்ள மணல் திட்டுகள் 5 கோடி ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்படும்.

## 14. தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டிணம் மற்றும் பெரியதாழை, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், வாலிநோக்கம் மற்றும் மோர்பனை ஆகிய 5 மீன் இறங்கு தளங்கள் மொத்தம் 24 கோடி ரூபாய் செலவில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்

தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டியன்பட்டிணம் மற்றும் பெரியதாழை மீன் இறங்கு தளங்கள் மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், மீன்உலர்தளம் மற்றும் கான்கிரீட் சாலை ஆகிய கூடுதல் வசதிகளுடன் மொத்தம் 13 கோடி ரூபாய் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம், திருப்பாலைக்குடி, நம்புதாளை மற்றும் மோர்பனை ஆகிய மீன் இறங்குதளங்களில் மீன் உலர்தளம், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் உட்பட பிற உட்கட்டமைப்பு வசதிகளுடன், மொத்தம் 11 கோடி ரூபாய் செலவிலும் மேம்படுத்தப்படும்.

**15. திருவள்ளூர் மாவட்டம், அண்ணாமலைச்சேரி, மற்றும் தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் ஆகிய மீன் இறங்கு தளங்கள் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுடன் 20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

திருவள்ளூர் மாவட்டம், அண்ணாமலைச்சேரி மீன் இறங்குதளத்தில் தாழ்நிலை படகு அணையும் சுவர், வலைபின்னும் கூடம் மற்றும் கான்கீரிட் சாலை வசதிகள் ஆகிய கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவிலும், தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் மீன் இறங்குதளத்தில், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், மின் விளக்குகள், உட்புறசாலை வசதி மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள் 10 கோடி ரூபாய் செலவிலும் மேற்கொள்ளப்படும்.

**16. தஞ்சாவூர் மாவட்டம், நெய்தலூர் அரசு மீன் பண்ணையில் மீன் வளர்ப்பு குளங்கள் மேம்பாட்டு பணிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகள் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நெய்தலூர் அரசு மீன் பண்ணையில் மீன் வளர்ப்பு குளங்கள் 3 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இதன் மூலம் ஆண்டொன்றிற்கு கூடுதலாக 30 இலட்சம் மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் வளர்ப்போருக்கு விநியோகம் செய்யப்படும்.

**17. தஞ்சாவூர் மாவட்டம், சம்பைப்பட்டிணம், காரங்குடா, பிள்ளையார் திடல், அடைக்கத்தேவன் மற்றும் கொள்ளுக்காடு ஆகிய இடங்களில் உள்ள படகு செலுத்தும் கால்வாய்கள் மற்றும் முகத்துவாரப் பகுதிகள் மொத்தம் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் தூர்வாரி சீரமைக்கப்படும்.**

தஞ்சாவூர் மாவட்டம், சம்பைப்பட்டிணம், காரங்குடா, பிள்ளையார் திடல், அடைக்கத்தேவன் மற்றும் கொள்ளுக்காடு ஆகிய பகுதிகளிலிருந்து, சுமார் 300-க்கும் மேற்பட்ட கண்ணாடி நாரிழை படகுகளை பயன்படுத்தி, மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படகுகளின் போக்குவரத்திற்கு ஆதாரமாக உள்ள படகு செலுத்தும் கால்வாய்கள் மற்றும் முகத்துவாரங்களில் படிந்துள்ள மணல் திட்டுகளை அகற்றி தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் மொத்தம் மூன்று கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

## 18. திண்டுக்கல் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் 80 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும்

திண்டுக்கல் மாவட்டத்தில் தரமான மீன்கள் மற்றும் மீன் உணவுகளை நியாயமான விலையில், சுகாதாரமான முறையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்திட ஏதுவாக, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நிலக்கோட்டை மற்றும் கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் 4 நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள், திண்டுக்கல் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக, மொத்தம் 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

## 19. தமிழ்நாட்டின் அண்மை கடற்பகுதியில் குறைந்து வரும் மீன்வளத்தை மேம்படுத்தும் வகையில் 3 கோடி ரூபாய் செலவில் கடலில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படும்

தமிழ்நாட்டின் அண்மை கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள மீன்பிடி அழுத்தத்தின் காரணமாக, மீன்வளம் குறைந்து வருகிறது. எனவே, கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன் மூலம் மீன்வளம் அதிகரிக்கும். முதற்கட்டமாக, மூன்று கோடி ரூபாய் செலவில் வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடல் மீன் இனங்களான கடல் விரால், கொடுவா, பால்கெண்டை போன்றவற்றின் 60 இலட்சம் மீன் குஞ்சுகள் 3 கோடி ரூபாய் செலவில் கடலில் இருப்பு செய்யப்படும். இதன் மூலம் அண்மை கடற்பகுதியில் மீன்வளம் பாதுகாக்கப்படுவதுடன், மீன் உற்பத்தி பெருகி மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வழிவகை ஏற்படும்.

## 20. 500 மீனவ இளைஞர்களுக்கு மீன்பிடி படகு ஓட்டுநர் பயிற்சி 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மீனவ இளைஞர்கள் பாதுகாப்பான முறையில் படகு செலுத்தும் திறனை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய மீன்வள கடல் மாலுமியியல் மற்றும் பொறியியல் பயிற்சி நிறுவனம் (CIFNET), மூலமாக 'மீன்பிடி படகு ஓட்டுநர் பயிற்சி' கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும். நடப்பாண்டில், 31 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில், 25 குழுக்களில் 500 மீனவ இளைஞர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும்.

## 21. கொடுவா மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் 95 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கப்பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டின் கடலோரங்களில் உவர்நீர் நிலப்பரப்பில் பெரும்பான்மையாக இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறால் வளர்ப்பில் ஏற்படும் நோய் தாக்குதல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த விலை வீழ்ச்சி காரணமாக இறால் வளர்ப்பிற்கு உபயோகப்படுத்தப்படாமல் உள்ள குளங்களில், கொடுவா (Sea bass) மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் வகையில், 150 தொழில் முனைவோருக்கு, 95 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த செயல் முறை விளக்கப் பயிற்சி வழங்கப்படும்.

## 22. சென்னையில் வண்ணமீன் கண்காட்சி மற்றும் மீன் உணவுத்திருவிழா 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனையில் நாட்டின் முக்கிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் விலை மதிப்புமிக்க பல்வேறு வகையான வண்ணமீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வண்ணமீன் வளர்ப்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தினை விளக்கிடும் வகையில் சென்னையில் வண்ணமீன் கண்காட்சி நடத்தப்படும். மேலும், பொது மக்கள் உடல் நலனில் மீன் உணவின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மீன் உணவுத்திருவிழாவும் நடத்தப்படும். இத்திட்டங்கள், மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

## 23. உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியமாக 1 கோடி ரூபாய் வழங்கப்படும்.

உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் நீர்தேக்கங்கள், ஆறுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர் நிலைகளில் தமது வாழ்வாதாரத்திற்காக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நீர்தேக்கம் மற்றும் குளங்களில் மீன்பிடி தொழில் மேற்கொள்ளும் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை மேம்படுத்தும் வகையில், 1,000 உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களான மீன்பிடி வலை மற்றும் பரிசல்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும்.

**24. சுகாதாரமான முறையில் மீன் விற்பனை செய்வதற்கான பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள், மீன் விற்பனை நிலையங்கள், குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் வாங்கிட பயனாளிகளுக்கு 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 10, 20, 30 மற்றும் 50 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட 10 பனிக்கட்டி ஆலைகள், 5 சிறிய மீன் அங்காடிகள், 5 உயிர் மீன் விற்பனை நிலையங்கள் ஆகியன அமைத்திடவும், 40 குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் மற்றும் 5 மூன்று சக்கர வாகனங்கள் வாங்கிடவும், பயனாளிகளுக்கு மொத்தம் 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**25. மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல், இடுபொருள் வழங்குதல் மற்றும் உவர்நீர் உயிர்க்கூழ்ம (Bio–floc) மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்களுக்கு 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.**

மீன்வளர்ப்பு பரப்பினை விரிவுபடுத்திடவும், உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திடவும், 10 ஹெக்டேர் பரப்பளவில் புதிய மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல் மற்றும் மீன்வளர்ப்பிற்கான உள்ளீட்டு பொருட்களுக்கான மானியமாக 57 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், நவீன மீன்வளர்ப்பு தொழில்நுட்பமான உயிர்க்கூழ்ம (Bio–floc) முறையில், குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு இறால் உற்பத்தி செய்திட ஊக்கப்படுத்திடும் வகையில் 5 உயிர்கூழ்ம (Bio–floc) அலகுகளுக்கு மூலதன மற்றும் நடைமுறை செலவின மானியமாக 43 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

**26. கடலில் மிதவைக் கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்பு மேற்கொள்ள, மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியமாக 55 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டின் கடலோர மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களின் மூலம் வருமானத்தை பெருக்கிட, கடலில் மிதவை கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்பு மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 25 மிதவை கூண்டுகள் அமைத்து, அவற்றில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த கடல் விரால், கொடுவா, பாறை போன்ற கடல் மீன்கள் வளர்த்திட 55 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**27. தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்வதற்கு 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.**

உள்நாட்டு மீன்வளத்தினை பெருக்கிடவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 6,434 ஹெக்டேர் பரப்பளவிலான நீர்த்தேக்கங்களில், சுமார் 64 இலட்சம் நன்கு வளர்ந்த கட்லா, ரோகு, மிர்கால் போன்ற மீன்குஞ்சு விரலிகள் 1 கோடியே 93 இலட்சம் மொத்த செலவில் இருப்பு செய்யப்படும். இத்திட்டத்திற்கென 77 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**28. நீலகிரி மாவட்டத்தின் உயர்மட்ட நீர்நிலைகளில், 'டிரவுட் மீன்' இருப்பினை பெருக்குவதற்கு, 77 இலட்சம் ரூபாய் செலவில் கருவுற்ற முட்டைகள் எடுத்து வரப்பட்டு, வளர்க்கப்பட்டு, இருப்பு செய்யப்படும்.**

நீலகிரி மாவட்டத்தில் உயர்மட்ட நீர்நிலைகளில் நீண்டகாலமாக ட்ரவுட் மீனினங்கள் இருப்பு செய்யப்பட்டு வருகிறது. இங்குள்ள 'ட்ரவுட்' தாய் மீன்களில் மரபியல் மேம்பாடு அடையச் செய்திடும் வகையில், 77 இலட்சம் ரூபாய் செலவில் பிற மாநிலங்களிலிருந்து ஆண்டொன்றிற்கு 3 இலட்சம் கருவுற்ற ட்ரவுட் மீன்முட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அவலாஞ்சி அரசு மீன்பண்ணையில் வளர்த்தெடுக்கப்பட்டு, நீலகிரி மாவட்ட உயர்மட்ட குளிர் நீரோடைகளில் இருப்பு செய்ய்யப்படும்.

**29. உள்நாட்டு மீன்வளத்தினை பெருக்கிடும் பொருட்டு நாட்டின மீன்வகைகள் மற்றும் இந்திய பெருங்கெண்டை மீன்குஞ்சுகள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஆறுகளில் இருப்பு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய ஆறுகளில் நாட்டின மீன்வகைகளின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும், ஆறுகளை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருமானத்தை பெருக்கிடும் நோக்கில், நாட்டின மீன்வகைகளான சேல்கெண்டை, கல்பாசு மற்றும் இந்திய பெருங்கெண்டை ஆகியவற்றின் 40 இலட்சம் மீன்குஞ்சுகள், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் காவிரி, பவானி, தாமிரபரணி மற்றும் அதன் கிளை ஆறுகளில் இருப்பு செய்யப்படும்.

## 30. மதுரை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தக மையம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

அலங்கார மீன் உற்பத்தியில் மதுரை மாவட்டம் தென் தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்குகிறது. வண்ண மீன் உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் அதிக அளவிலான வண்ண மீன் இனங்களை ஒரே இடத்தில் விற்பனை செய்திட ஏதுவாக, மதுரை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் ஒரு கோடி ரூபாய் செலவில் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தக மையம் அமைக்கப்படும். இம்மையம் மூலம் வண்ணமீன் வணிகம் அதிகரிக்கும்.

**31. சென்னை மாதவரம் பகுதியிலுள்ள மணலி மற்றும் மாத்தூர் ஏரிகளை சீரமைத்து பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

சென்னை மாநகரிலுள்ள மாதவரம் பகுதியில் ஏறத்தாழ 50 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள மணலி மற்றும் மாத்தூர் ஏரிகள் தற்பொழுது மழை நீர் சேகரிப்பிற்கும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின், கால்நடை பண்ணைக்கான பசுந்தீவன உற்பத்திக்கும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. மாதவரம் மற்றும் மாத்தூர் பகுதி பொதுமக்களின் கோரிக்கைகளின்படி, இந்த ஏரிகளை மீன்வள சுற்றுலாத்தலமாக மேம்படுத்திடும் வகையில், மணலி மற்றும் மாத்தூர் ஏரிகளை சீரமைத்து, மீன்பிடிப்பு உள்ளிட்ட பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய சுற்றுச்சூழல் பூங்கா ஏற்படுத்துவதற்கு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் சாத்தியக்கூறு ஆய்வுகள் 10 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**32. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் வியாபார கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு மூன்று பனிக்கட்டி நிலையங்கள் அமைத்தல் மற்றும் மூன்று டீசல் விற்பனை நிலையங்களை புனரமைத்தல் ஆகிய பணிகள் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறை, நம்பியார் நகர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், கீழமூவர்க்கரை மீனவ கிராமங்களில் பனிக்கட்டி நிலையங்கள் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைபேட்டை, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் ஆகிய இடங்களிலுள்ள டீசல் விற்பனை நிலையங்கள் 60 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

**33. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வண்ண மீன் வகைகளை இறக்குமதி செய்து, உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் வண்ண மீன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள், பிரபலமான வெளிநாட்டு மீன் வகைகளை இறக்குமதி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, தமிழ் நாட்டில் உள்ள வண்ண மீன் உற்பத்தியாளர்கள் நலனுக்காகவும், வண்ண மீன் உற்பத்தியை ஊக்குவித்திடும் வகையிலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வண்ண மீன் வகைகளை இறக்குமதி செய்து உற்பத்தியாளர்களுக்கு வழங்கிடும் திட்டம் 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.